*ஸ்ரீராமஜயம்*

# *"த்வமேவ சரணம் பாண்டுரங்க விட்டல"*

*தொகுப்பு : ஸ்ரீ N.லக்ஷ்மணன், மல்காஜ்கிரி, ஹைதராபாத்*

***अजं रुक्मिणी-प्राणसंजीवनं तं परंधाम कैवल्यमेकं तुरीयम् ।***
***प्रसन्नं प्रसन्नार्तिहं देवदेवं परब्रह्मलिङ्गं भजे पाण्डुरंगम् ।।***

*அஜம் ருக்மிணீ-ப்ராணஸஞ்ஜீவநம் தம்*
*பரந்தாம கைவல்யமேகம் துரீயம்*
*ப்ரஸன்னம் ப்ரஸன்னார்த்திஹம் தேவதேவம்*
*பரப்ரஹ்மலிங்கம் பஜே பாண்டுரங்கம்*

*ஸ்ரீ ருக்மணீ ஸமேத ஸ்ரீபாண்டுரங்க விட்டல பரப்ரஹ்மணே நம:*

*இனிமையான, எளிதான, தூய்மையான ஸ்ரீபாண்டுரங்கவிட்டல பெருமானின் நாம ஸங்கீர்த்தனங்களை பூஜ்ய ஸ்ரீஹரிபஜனை பாகவதர்கள் பாடும்போது அதை மெய்மறந்து சிரத்தையுடன் கேட்டு யாவரும் தாங்களும் பாடி பகவானிடம் பக்தியுடன் லயம் அடைகிறார்கள். "ஜெய் ஜெய் விட்டல, ஜெய ஹரி விட்டல, பாண்டு ரங்க விட்டல, பண்டரீச விட்டல" என்று அந்த ருக்மிணீ காந்தனின் நாமாவளிகளை விடாமல் காலம் நேரம் தெரியாமல் ஜால்ரா தாளத்துடன் சொல்லும்பொழுது, அநேக பக்தர்கள் தங்களை அறியாமல் பக்திப்பரவசத்துடன் ஆடுகிறார்கள். இந்த தெய்வீக சூழ்நிலையை ஹரி பஜனை நடக்கும் இடங்களிலெல்லாம் பார்க்கிறோம். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இந்த "பாண்டு ரங்க த்யானம்" அகிலமெங்கும் வியாபித்துள்ளது. ஸ்ரீபாண்டுரங்கனின் முக்ய வாசஸ்தலமான <u>ஸ்ரீபண்டரிபுரத்தில்</u> ஆகாச வெளி, நீர் நிலைகள், மக்கள் வாசஸ்தலங்கள், எங்கு பார்த்தாலும் எப்பொழுதும் 'விட்டல' நாம ஸங்கீர்த்தனத்தின் தெய்வீக ஒலி பரவியுள்ளது.*

## *2. ஸ்ரீ மஹா பக்த விஜயம்*

*பக்தர்கள் ஹ்ருதயத்தில் நிலையக குடி கொண்டுள்ள இந்த பாண்டுரங்கனின் அருள் பெற்றவர்களின் புனிதமான கதைகளை ஸ்ரீ மஹா பக்த விஜயத்தில் காணலாம். பகவான் பக்தர்களுக்காக இரங்கி வந்து அவர்களுக்கு அருள் புரிய அவர்கள் வாழ்க்கையில் விஜயம் செய்தான் என்பதுதான் பக்த விஜயம் என்பதின் தாத்பர்யம். இறைவனை*

*வழிபடுவதிலும் அவன் அருளுக்கு பாத்திரமான நிலையிலும் ஜாதி, குலம், வயது, சூழ்நிலை, கல்வி அளவு, செல்வம், தொழில் இவற்றுள் எதுமே தகுதி என்ற அளவுகோலுக்கு உட்பட்டதில்லை. உண்மை பக்தனுக்கு அருள்புரிய பாண்டுரங்கன் முதியவனாகவும், இல்லத்தலைவனாகவும், பணியாளனாகவும் இப்படி பல வடிவுகளிலும் வந்த திருவிளையடல்கள் புரிந்த வரலாறுகளை ஸ்ரீ மஹா பக்த விஜயத்தில் காணலாம். ஸ்ரீபாண்டுரங்க விட்டல பெருமான் அருள் புரிந்த சில பெருமை வாய்ந்த பக்தர்கள் பின்வறுமாறு.*

1. *ஸ்ரீ நாம தேவர்*
2. *ஞானேசுவரர்*
3. *ஸ்ரீ சக்குபாய்*
4. *ஸ்ரீபுரந்தரதாஸர்*
5. *ஸ்ரீபோசலாபாவா*
6. *ஸ்ரீ தாமாஜி பண்டிதர்*
7. *ஸ்ரீ கோராகும்பர்*
8. *ஸ்ரீ துக்காராம்*
9. *ஸ்ரீ கோசாமேளர்*
10. *ஸ்ரீ நரசிம்ம மேதா*
11. *ஸ்ரீ ஏகநாதர்*
12. *ஸ்ரீ பானுதாஸர்*
13. *ஸ்ரீ சாங்க தேவர்*
14. *ஸ்ரீ பகிரம பட்டர்*
15. *ஸ்ரீ புண்டரீகர்*
16. *ஸ்ரீ ராகா கும்பார்*
17. *ஸ்ரீ பரிச பாகவதர்*
18. *ஸ்ரீ ஜகன்மித்ரர்*
19. *ஸ்ரீ ஜோகா பரமானந்தர்*
20. *ஸ்ரீ ஜனாபாய்*
21. *ஸ்ரீ ஜம்பு தாஸர்*

*இவர்கள் மாதிரி இன்னும் அநேக பாண்டுரங்க பக்தர்களைப்பற்றி ஸ்ரீ மஹா பக்த விஜயத்தில் காணலாம். வெவ்வேறு குலத்தவர்களான இவர்கள் அவரவர்கள் குறிக்கோளுக்கு ஏற்ப பக்தியில் திளைத்து பாண்டு ரங்கன் அருள் பெற்றவர்கள். நம் வாழ்க்கையில் ஒரு முறையாவது "ஸ்ரீ மஹா பக்த விஜயத்தை" படிக்கும் பாக்யம் பெற்று பாண்டுரங்கனின் பாதமலர்களில் மனம் லயிக்க வேண்டும். அதுதான் பிறவி எடுத்ததின் புன்னிய பயன்.*

### *3. பாண்டுரங்க ஸ்துதி/பாடல்கள்*

*ஸ்ரீ பாண்டுரங்க விட்டல் பெருமானின் ஸ்துதிகள், புராணங்களிலும், ஏராளமான மஹாராஷ்ட்ர அபங்கங்களிலும் உள்ளன. விசேஷமான தத்வார்த்தங்களும் பக்தி உணர்ச்சி ததும்பும் அபங்கங்களைப்பற்றிய எல்லா விவரங்களையும் எழுதுவது என்பது அவ்வளவு எளிதல்ல. ஹரி பஜனைகளில் பங்கு கொள்வோர்களுக்குத்தான் அதன் விசேஷங்கள் அனுபவிக்க முடியும். உதாரணமாக ஒரு அபங்கம்- ஜனாபாய் அபங்கம்*

*1. யேக யேக விடா பாயி மாஜே பண்டரீசே ஆயி*
*2. பீமா ஆணி சந்த்ர பாகா துஜியா சரணீம் ச்யா கங்கா*
*3. இதுக்யாம் ஸஹித த்வாம்பா யாவே மாஜே ரங்கணீ நாசாவேம்*
*4. மாஜா ரங்க துஜே குணீம் ஹணே நாமயாகீ ஜனீ*

*இவ்விதமாகவே, ஸ்ரீபாண்டுரங்க ஸ்தோத்ரங்கள் புராணங்களிலும், பக்தர்களால் இயற்றப்பட்டதும் ஏராளமாக உள்ளன. இக்கட்டுரையில் ஸ்ரீ பவிஷ்யாத்தர புராணத்தில் பாண்டுரங்க மாஹாத்ம்ய பகுதியில் 91 சுலோகங்கள் அடங்கிய "ஸ்ரீ விட்டல ஹ்ருதயம்" என்ற அபூர்வமான ஸ்தோத்ரம் மாத்திரம் எழுதப்பட்டுள்ளன.*

*இந்த கட்டுரையின் இறுதி பாகத்தில் ஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்கள் இயற்றிய சில பாண்டுரங்க பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த பாடல்கள், ஒரு பாண்டுரங்க பக்தனின் கதையை ஆதாரமாகக் கொண்டவை. பாண்டு ரங்க பக்தனான ஸ்ரீ ராஜேந்திரன் என்ற உஜ்ஜயினி மன்னனை காமவலையில் விழாமல் தப்புவித்து, ராஜபோகங்களைத் துறக்கச் செய்து, பாண்டுரங்கன் தானே துறவியாய் வலுவில் வந்து ஆட்கொண்டு முக்தி அளித்தான். அந்த பக்தன் பாண்டுரங்கனைப் போற்றிய பாடல்கள் தூய்மையான பக்தி ரஸம் ததும்புபவை.*

### *4. ஸ்ரீ விட்டல ஹ்ருதயம்*

*இந்த ஸ்துதி ஸ்ரீபவிஷ்யாத்தர புராணத்தில் 'பாண்டுரங்க மாஹாத்ம்ய' பகுதியில் உள்ளது. இதன் ஸம்ஸ்க்ருத லிபி இந்த கட்டுரையின் இறுதியில் உள்ளது. இதில் உள்ள மொத்தம் 91 சுலோகங்களின் விவரம் பின்வருமாறு.*

*(1 to 10 சுலோகங்கள்)*

*ஸ்ரீபார்வதி தேவி ஸ்ரீபரமேச்வரனை அணுகி ஸ்ரீவிட்டல ஹ்ருதயத்தின் மேன்மை பற்றி வினவ, அதற்கு பரமேச்வரன் மஹா அற்புதமான இந்த ஸ்தோத்ரத்தில் உள்ள ரஹஸ்ய விசேஷங்களையும் புண்ய பலன்களைப்பற்றி கூறுகிறார்.*

*(11 to 59 சுலோகங்கள்)*

*தொடர்ந்து ப்ரஹ்ம தேவர் மஹா விஷ்ணுவை இந்த ஸ்துதி மஹிமையைப் பற்றி கேட்க, ஸ்ரீபாண்டுரங்க விட்டல பகவானைப்பற்றியும் பண்டரீபுர க்ஷேத்திர மஹிமைகளையும் புண்ய பலன்களைப் பற்றியும் ஸ்ரீ பகவான் விளக்கமாக சொல்கிறார். பிறகு, இந்த ஸ்துதியின் த்யான சுலோகம் ந்யாஸங்கள், மூல மந்த்ரம், கவசம், சரீர அங்க ந்யாஸங்கள் முதலியவைகளும் விவரிக்கப்படுகின்றன.*

*60 to 86 வரை உள்ள சுலோகங்கள் ஸ்ரீபாண்டுரங்க விட்டல பெருமானின் ஸ்தோத்ரமாகவும், நமஸ்காரங்களாகவும் அமைந்துள்ளன. இந்த "விட்டல ஹ்ருதய"த்தை முழுவதுமாக குருமுகமாக மந்த்ரோபதேசமாக பெற்று ஜபம்/பாராயணம் செய்ய இயலாவிட்டால் முதலில் த்யான சுலோகம் (29ம் சுலோகம்) சொல்லி இந்த 60 முதல் 86 சுலோகங்களைச் சொல்லி ஸ்ரீபாண்டுரங்க விட்டலனை பஜிக்க ஏதுவாக, இந்த 27 சுலோகங்களின் தமிழாக்கம் கீழே தரப்பட்டுள்ளது.*

*விட்டல ஹ்ருதய த்யான சுலோகம் (29ம் சுலோகம்)*

*ஓம் ஸ்ரீம் க்லீம் ப்ரஹஸிதமுகசந்த்ரம் ப்ரோல்லஸத்பூர்ணபிம்பம்*
*ப்ரணமதபயஹஸ்தம் சாருநீலாம்புதாபம்*
*ஸமபதகமநீயம் தத்வபோதாவகம்யம்*
*ஸதயவரததேவம் விட்டலம் தம் நமாமி (29)*

*மூல மந்த்ரம்*
*க்லீம் ஸ்ரீம் ஓம் ஓம் ஸ்ரீம் க்லீம்*

*(60ம் சுலோகம் முதல் 86ம் சுலோகம் வரை)*

*க்லீம் ஸ்ரீம் ஓம் ஓம் ஸ்ரீம் க்லீம் .*

1. *விட்டலாய நமஸ்துப்யம் நமோ விக்ஞானஹேதவே*
   *விஷ்ணுஜிஷ்ணுஸ்வரூபாய ஸ்ரீவிஷ்ணவே நமோ நம: (60)*

2. *நம: புண்டரீகாக்ஷாய பூர்ணபிம்பாத்மநே நம:*
   *நமஸ்தே பாண்டுரங்காய பாவநாய நமோ நம: (61)*

3. *நம: பூர்ணப்ரகாSaய நமஸ்தே பூர்ணதேஜஸே*
   *பூர்ணைSவர்யஸ்வரூபாய பூர்ணக்ஞாநாத்மநே நம: (62)*

4. *ஸச்சிதாநந்தகந்தாய நமோ அநந்தஸுகாத்மநே*
   *நமோ அநந்தாய Sஅந்தாய ஸ்ரீராமாய நமோ நம: (63)*

5. *நமோ ஜ்யோதி: ஸ்வரூபாய நமோ ஜ்யோதிர்மயாத்மநே*
*நமோ ஜ்யோதி: ப்ரகாSaய ஸர்வோத்க்ருஷ்டாத்மநே நம: (64)*

6. *ஓம் நமோ ப்ரஹ்மரூபாய நமோ ஓங்காரமூர்தயே*
*நிர்விகல்பாய ஸத்யாய S|த்தஸத்வாத்மநே நம: (65)*

7. *மஹத்ப்ரஹ்ம நமஸ்தேஸ்து ஸத்ய ஸங்கல்பஹேதவே*
*நம: ஸ்ருஷ்டிப்ரகாSaய குணாதீதாய தே நம: (66)*

8. *பிரம்ம விஷ்ணு மஹேSaய நானா வர்ணாத்ம ரூபிணே*
*ஸதோத்தாய S|த்தாய குணாத்தாய தே நம: (67)*

9. *நம: ஸஹஸ்ரநாம்நே ச நம: ஸஹஸ்ரரூபிணே*
*நம: ஸஹஸ்ரவக்த்ராய ஸஹஸ்ராக்ஷாய தே நம: (68)*

10. *கேSவாய நமஸ்துப்யம் நமோ நாராயணாய ச*
*மாதவாய நமஸ்தேஸ்து கோவிந்தாய நமோ நம: (69)*

11. *ஸ்ரீவிஷ்ணவே நமஸ்துப்யம் மதுஸூதநரூபிணே*
*த்ரிவிக்ரமஸுதீர்காய வாமநாய நமோ நம: (70)*

12. *ஸ்ரீதராய நமஸ்துப்யம் ஹ்ருஷீகேSaய தே நம:*
*நமஸ்தே பத்மநாபாய தாமோதராய தே நம: (71)*

13. *நமஸ்தே ஸங்கர்ஷணாய வாஸுதேவாய தே நம:*
*ப்ரத்யும்நாய நமஸ்தேஸ்து அநிருத்தாய தே நம: (72)*

14. *நம: புருஷோத்தமாயாதோக்ஷஜாய தே நமோ நம:*
*நமஸ்தே நாரஸிம்ஹாய அச்யுதாய நமோ நம: (73)*

15. *நமோ ஜநார்தநாயாஸ்துரபேந்த்ராய ச நமோ நம:*
*ஸ்ரீஹரயே நமஸ்துப்யம் ஸ்ரீக்ருஷ்ணாய நமோ நம: (74)*

16. *நம: பண்டரிநாதாய பீமாதீரநிவாஸிநே*
*நமோ ரிஷிப்ரஸந்நாய வரதாய நமோ நம: (75)*

17. *இஷ்டிகாரூடரூபாய ஸமபாதாய தே நம:*
*கடிவிந்யஸ்த ஹஸ்தாய முகப்ரஹ்மாத்மநே நம: (76)*

*18.* *நமஸ்தீர்தஸ்வரூபாய க்ஷேத்ரரூபாத்மநே நம:*
*நமோஸ்து மூர்திமூர்தாய த்ரிமூர்தயே நமோ நம: (77)*

*19.* *நமஸ்தே பிந்துதீர்தாய நமோம்ருதே Sவராய ச*
*நம: புஷ்கரதீர்தாய சந்த்ரபாகாய தே நம: (78)*

*20.* *நமஸ்தே ஜாநுதேவாய தீராவத்யை நமோ நம:*
*நமஸ்தே புண்டரீகாய பீமரத்யை நமோ நம: (79)*

*21.* *முக்திகே Sப்ரவராய வேணுவாதாத்மநே நம:*
*நமஸ்தேஅநந்தபாதாய த்விபதாய நமோ நம: (80)*

*22.* *நமோ கோவத்ஸபாதாய கோபாலாய நமோ நம:*
*நமஸ்தே பத்மதீர்தாய நரநாராயணாத்மநே (81)*

*23.* *நமஸ்தே பித்ருதீர்தாய லக்ஷ்மீதீர்தாய தே நம:*
*நமோஸ்து Sங்சக்ராய கதாபத்மாய தே நம: (82)*

*24.* *நமோ அSவத்த ந்ருஸிம்ஹாய குண்டலாக்யஸ்வரூபிணே*
*நமஸ்தே க்ஷேத்ரபாலாய மஹாலிங்காய தே நம: (83)*

*25.* *நமஸ்தே ரங்கSaலாய நம: கீர்தநரூபிணே*
*நமோ ருக்மிணிநாதாய மஹாமூர்த்யை நமோ நம: (84)*

*26.* *நமோ வைகுண்டநாதாய நம: க்ஷீராப்தி Saயிநே*
*ஸர்வப்ரஹ்ம நமஸ்துப்யமஹம்ப்ரஹ்மாத்மநே நம: (85)*

*27.* *நமோ நமோ நமஸ்துப்யம் நமஸ்தேஸ்து நமோ நம:*
*க்லீம் ஶ்ரீம் ஓம்*
*ஆத்யந்தே ஸந்ருடீக்ரித்ய பீஜைSச ப்ரணவல்லபே (86)*

*இந்த 27 சுலோகங்களிலும் 108 மந்த்ர - நாமாக்கள் அடங்கியுள்ளன. இறுதி பாகத்தில் உள்ள 87ம் சுலோகம் முதல் 91ம் சுலோகம் வரை பரமேச்வரனே சொன்னபடி ஶ்ரீ பாண்டுரங்க விட்டலனின் இந்த ஸ்துதியை தினமும் ஸங்கீர்த்தனம் செய்பவர்கள் பகவான் அருளால் வைகுண்ட ஸாயுஜ்யம் அடைவார்கள்.*

## विठ्ठलहृदयम्

श्रीपार्वत्युवाच ।

महाशम्भो देवदेव भक्तानुग्रहकारक ।
श्रीविठ्ठलाख्यं हृदयं तन्मे ब्रूहि सदाशिव ।।१।।

श्रीशङ्कर उवाच ।

श्रृणु देवि महादेवि पार्वति प्राणवल्लभे ।
गुह्याद्गुह्यतरं श्रेष्ठं नास्ति गुह्यमतः परम् ।।२।।

जीवस्य जीवनं साक्षात्प्राणिनां प्राणउच्यते ।
योगिनां हि महागम्यं पाण्डुरङ्गाभिधानकम् ।।३।।

अद्यापि महिमा तस्य सर्वथा ज्ञायते न हि ।
नित्यनूतनतत्क्षेत्रस्योपमा नास्ति निश्चितम् ।।४।।

मुखं कञ्जेन तुलितं पद्मपत्रसमेक्षणम् ।
कथं साम्यं भवेद्देवि ह्यन्तरं महदन्तरम् ।५।।

गजैरावतयोश्चैव अश्वोच्चैः श्रवसोस्तथा ।
स्पर्शपाषाणयोश्चैव ह्यन्तरं महदन्तरम् ।।६।।

काश्याः शतगुणं श्रेष्ठं द्वारवत्या द्विलक्षयोः ।
एवं सर्वाणि तीर्थानि कला नार्हन्ति कानिचित् ।।७।।

तीर्थं क्षेत्रं दैवतं च मन्त्रः स्तोत्रं महाद्भुतम् ।
एतत्सर्वं यथाशक्त्या वर्णयामि मम प्रिये ।।८।।

एकदा क्षीरसंस्थाने देवदेवं जगद्गुरुम् ।
गतोऽहं पादपूजार्थं सुरेन्द्रब्राह्मणैः सह ।।९।।

शेषनारदपक्षीन्द्रैर्लक्ष्मीकान्तं गणैः सह ।
प्रणम्य परमात्मानं तमुवाच चतुर्मुखः ।।१०।।

ब्रह्मोवाच ।
महाविष्णो जगन्नाथ सर्वविश्वगुहाशय ।
तव यच्च प्रियं देव संस्थानं ब्रूहि केशव ।।११।।

श्रीभगवानुवाच ।
श्रृणु ब्रह्मन् महाशंभो अधिष्ठानं ममालयम् ।
पाण्डुरंगमिति ख्यातं न साम्यं भुवनत्रये ।।१२।।

पाण्डुरंगं च वैकुण्ठं तुलयित्वा मयाऽधुना ।
पाण्डुरंगं गुरुं मत्वा पूर्णत्वेनास्थितोऽस्म्यहम् ।।१३।।

नाहं तिष्ठामि क्षीराब्धौ नास्मि सूर्येन्दुमण्डले ।
मन्नामकीर्तनस्थाने तत्र तिष्ठामि शंकर ।।१४।।

कार्य कारणकर्तृत्वे संभवक्षेत्रमुच्यते ।
तादृशं नास्ति तत्क्षेत्रं यत्र तिष्ठामि सर्वदा ।।१५।।

सुखे संजयति ब्रह्म ब्रह्मबीजं प्रशस्यते ।
बीजेन व्यज्यते बिन्दुर्बिन्दोर्नादः प्रकीर्तितः ।।१६।।

आहनतोऽनाहतश्चेति द्विधा नादस्तु विद्यते ।
ओंकारोऽनाहतो मूर्तिराहतो नामकीर्तनम् ।।१७।।

बिन्दुनादात्मकं क्षेत्रं नादोऽव्यक्तः प्रदृश्यते ।
यत्र संकीर्तनेनैव साक्षाद्ब्रह्ममयो भवेत् ।।१८।।

कीदृशं धृतवान् रूपमित्याह परमेश्वरः ।
इष्टिकायां समपदं तत्त्वमस्यादिलक्षणम् ।।१९।।

कटिविन्यस्तहस्ताब्जं प्रणवाकृतिसौरसम् ।
ऊर्ध्वबीजसमाख्यतं पूर्णेन्दुमुखमण्डनम् ।।२०।।

सर्वभूषणशोभाढ्यमीदृशं मोक्षदं नृणाम् ।
अज्ञानजनबोधार्थं तिष्ठामीह जनार्दनः ।।२१।।

विठ्ठलः परमो देवस्त्रयीरूपेण तिष्ठति ।
तीर्थं क्षेत्रं तथा देवो ब्रह्म ब्रह्मविदां वर ।।२२।।

गुह्याद्गुह्यतरं देवं क्षेत्राणां क्षेत्रमुत्तमम् ।
चन्द्रभागावरं तीर्थं न भूतं न भविष्यति ।।२३।।

इति श्रुत्वा रमेशस्य वचनं परमामृतम् ।
ब्रह्मा नारदसंयुक्तो हृदयं कीर्तयन् ययौ ।।२४।।

इदं विठ्ठलहृदयं सर्वदारिद्र्यनाशनम् ।
सकृत्पठनमात्रेण लभते परमं पदम् ।।२५।।

ओमस्य हृदयमन्त्रस्य परब्रह्म ऋषिः स्मृतः ।
छन्दोऽनुष्टुप् प्रविख्यातो देवः श्रीविठ्ठलो महः ।।२६।।

ओं नमो बीजमाख्यातं श्रीं पातु शक्तिरी डिता ।
ओं श्रीं क्लीं कीलकं यस्य वेधको देवविठ्ठलः ।।२७।।

त्रिबीजैरङ्गुलिन्यासः षडंगानिततः परम् ।
ध्यानादिकं महादिव्यं हृदयं हृदये स्मरेत् ।।२८।।

ओं अस्य श्रीविठ्ठलहृदयस्तोत्रमंत्रस्य परब्रह्म ऋषिः । अनुष्टुप् छन्दः । श्रीविठ्ठलः परमात्मा देवता । ओं नम इति बीजम् । ओं श्रीं शक्तिः । ओं श्रीं क्लीं कीलकम् । ओं श्रीं विठ्ठलो वेधकः । श्रीविठ्ठलप्रीत्यर्थं जपे विनियोगः । ओं श्रीं क्लीं अंगुल्यादि-षडंगन्यासः ।। अथ ध्यानम्

ओं श्रीं क्लीं प्रहसितमुखचन्द्रं प्रोल्लसत्पूर्णबिंबं
प्रणमदभयहस्तं चारुनीलांबुदाभम् ।
समपदकमनीयं तत्त्वबोधावगम्यं
सदयवरददेवं विठ्ठलं तं नमामि ।।२९।।

क्लीं श्रीं ओं ओं श्रीं क्लीम् ।।

पाण्डुरंगः शिखां पातु मूर्धानं पातु विठ्ठलः ।
मस्तकं माधवः पातु तिलकं पातु श्रीकरः ।।३०।।

भर्गः पातु भ्रुवोर्मध्ये लोचने विष्णुरोजसा ।
दृष्टिं सुदर्शनः पातु श्रोत्रे पातु दिगंबरः ।।३१।।

नासाग्रं सृष्टिसौन्दर्य ओष्ठौ पातु सुधार्णवः ।
दन्तान् दयानिधिः पातु जिह्वां मे वेदवल्लभः ।।३२।।

तालुदेशं हरिः पातु रसनां गोरसप्रियः ।
चिबुकं चिन्मयः पातु ग्रीवां मे गरुडध्वजः ।।३३।।

कण्ठं तु कम्बुकण्ठश्च स्कन्धौ पातु महाबलः ।
भुजौ गिरिधरः पातु बाहू मे मधुसूदनः ।।३४।।

कूर्परौ कृपयाविष्टः करौ मे कमलापतिः ।
अङ्गुलीरच्युतः पातु नखानि नरकेसरी ।।३५।।

वक्षः श्रीलाञ्छनः पातु स्तनौ मे स्तनलालसः ।
हृदयं श्रीहृषीकेश उदरं परमामृतः ।।३६।।

नाभिं मे पद्मनाभश्च कुक्षिं ब्रह्मांडनायकः ।
कटिं पातु कटिकरो जघनं तु जनार्दनः ।।३७।।

शिश्नं पातु स्मराधीशो वृषणे वृषभः पतिः ।
गुह्यं गुह्यतरः पातु ऊरू पातूरुविक्रमः ।।३८।।

जानू पातु जगन्नाथो जङ्घे मे मनमोहनः ।
गुल्फौ पातु गणाधीशः पादौ पातु त्रिविक्रमः ।।३९।।

शरीरं चाखिलं पातु नरनारायणो हरिः ।
अग्रे ह्यग्रतरः पातु दक्षिणे दक्षकप्रियः ।।४०।।

पृष्ठे पुष्टिकरः पातु वामे मे वासवप्रभुः ।
पूर्वे पूर्वापरः पातु आग्नेय्यां चाग्निरक्षकः ।।४१।।

दक्षिणे दीक्षितार्थश्च नैर्ऋत्यामृतुनायकः ।
पश्चिमे वरुणाधीशो वायव्ये वातजापतिः ।।४२।।

उत्तरे धृतखड्गश्च ईशान्ये पातु ईश्वरः ।
उपरिष्टातु भगवानंतरिक्षे चिदम्बरः ।।४३।।

भूतले धरणीनाथः पाताले कूर्मनायकः ।
स्वर्गो पातु सुरेन्द्रेन्द्रो ब्रह्मांडे ब्रह्मणस्पतिः ।।४४।।

अटव्यां नृहरिः पातु जीवने विश्वजीवनः ।
मार्गे पातु मनोगम्यः स्थाने पातु स्थिरासनः ।।४५।।

सबाह्याभ्यन्तरं पातु पुंडरीकवरप्रियः ।
विष्णुर्मे विषयान् पातु वासनाः पातु वामनः ।।४६।।

कर्ता कर्मेन्द्रियं पातु ज्ञाता ज्ञानेन्द्रियं सदा ।
प्राणान् पातु प्राणनाथ आत्मरामो मनादिषु ।।४७।।

जागृतिं मे जगद्ब्रह्म स्वप्नं पातु सुतेजकः ।
सुषुप्तिं मे समाधीशस्तुर्यां पातु मुनिप्रियः ।।४८।।

भार्यां पातु रमाकांतः पुत्रान् पातु प्रजानिधिः ।
कन्यां मे करुणानाथो बान्धवान् भक्तवत्सलः ।।४९।।

धनं पातु धनाध्यक्षो धान्यं विश्वकुटुम्बकः ।
पशून्मे पालकः पातु विद्यां पातु कलानिधिः ।।५०।।

वाचस्पतिः पातु वादे सभायां विश्वमोहनः ।
कामक्रोधोद्भवात्पातु पूर्णकामो मनोरमः ।।५१।।

वस्त्रं रत्नं भूषणं च नाम रूपं कुलं गृहम् ।
सर्वं सर्वात्मकः पातु शुद्धब्रह्मपरात्परः ।।५२।।

क्लीं श्रीं ओं ओं श्रीं क्लीम् ।
विठ्ठलं मूर्ध्नि विन्यस्य ललाटे श्रीकरं न्यसेत् ।
पाण्डुरङ्गं भ्रुवोर्मध्ये नेत्रेयोर्व्यापकंन्यसेत् ।।५३।।

कर्णयोर्निगमार्थं च गल्लयोर्वल्लभं न्यसेत् ।
नासिकायां न्यसेत्कृष्णं मुखे वै माधवं न्यसेत् ।।५४।।

ओष्ठयोर्मुरलीकान्तं दन्तपङ्क्त्यां सुहासकम् ।
रसनायां रसाधीशं जिह्वाग्रे कीर्तनं न्यसेत् ।।५५।।

कण्ठे न्यसेन्महाविष्णुं स्कन्धयोः कमलापतिम् ।
बाह्वोर्बलानुजं न्यस्य करे चक्रधरं न्यसेत् ।।५६।।

पाणितले पद्मधरं कराग्रे वरदाभयम् ।
वक्षःस्थले वरेण्यं च हृदये श्रीहरिं न्यसेत् ।।५७।।

उदरे विश्वभर्तारं नाभौ नाभिकरं न्यसेत् ।
कट्यां न्यसेत्क्रियातीतमूरौ तु उद्धवप्रियम् ।।५८।।

जानुद्वये न्यसेत्छक्तिं पादयोः पावनं न्यसेत् ।
सबाह्याभ्यन्तरं न्यस्य देवदेवं जगद्गुरुम् ।।५९।।

क्लीं श्रीं ओं ओं श्रीं क्लीं ।

विठ्ठलाय नमस्तुभ्यं नमो विज्ञानहेतवे ।
विष्णुजिष्णुस्वरूपाय श्रीविष्णवे नमो नमः ।।६०।।

नमः पुण्डरीकाक्षाय पूर्णबिम्बात्मने नमः ।
नमस्ते पाण्डुरङ्गाय पावनाय नमो नमः ।।६१।।

नमः पूर्णप्रकाशाय नमस्ते पूर्णतेजसे ।
पूर्णैश्वर्यस्वरूपाय पूर्णज्ञानात्मने नमः ।।६२।।

सच्चिदान्दकन्दाय नमोऽनन्तसुखात्मने ।
नमोऽनन्ताय शान्ताय श्रीरामाय नमो नमः ।।६३।।

नमो ज्योतिः स्वरूपाय नमो ज्योतिर्मयात्मने ।
नमो ज्योतिः प्रकाशाय सर्वोत्कृष्टात्मने नमः ।।६४।।

ओं नमो ब्रह्मरूपाय नमो ओंकारमूर्तये ।
निर्विकल्पाय सत्याय शुद्धसत्त्वात्मने नमः ।।६५।।

महद्ब्रह्म नमस्तेऽस्तु सत्य संकल्पहेतवे ।
नमः सृष्टिप्रकाशाय गुणातीताय ते नमः ।।६६।।

ब्रह्मविष्णुमहेशाय नानावर्णात्मरूपिणे ।
सदोदिताय शुद्धाय गुणातीताय ते नमः ।।६७।।

नमः सहस्रनाम्ने च नमः सहस्ररूपिणे ।
नमः सहस्रवक्त्राय सहस्राक्षाय ते नमः ।।६८।।

केशवाय नमस्तुभ्यं नमो नारायणाय च ।
माधवाय नमस्तेऽस्तु गोविन्दाय नमो नमः ।।६९।।

श्रीविष्णवे नमस्तुभ्यं मधुसूदनरूपिणे ।
त्रिविक्रमसुदीर्घाय वामनाय नमो नमः ।।७०।।

श्रीधराय नमस्तुभ्यं हृषीकेशाय ते नमः ।
नमस्ते पद्मनाभाय दामोदराय ते नमः ।।७१।।

नमस्ते संकर्षणाय वासुदेवाय ते नमः ।
प्रद्युम्नाय नमस्तेऽस्तु अनिरुद्धाय ते नमः ।।७२।।

नमः पुरुषोत्तमायाधोक्षजाय ते नमो नमः ।
नमस्ते नारसिंहाय अच्युताय नमो नमः ।।७३।।

नमो जनार्दनायास्तूपेन्द्राय च नमो नमः ।
श्रीहरये नमस्तुभ्यं श्रीकृष्णाय नमो नमः ।।७४।।

नमः पंढरिनाथाय भीमातीरनिवासिने ।
नमो ऋषिप्रसन्नाय वरदाय नमो नमः ।।७५।।

इष्टिकारूढरूपाय समपादाय ते नमः ।
कटिविन्यस्त हस्ताय मुखब्रह्मात्मने नमः ।।७६।।

नमस्तीर्थस्वरूपाय क्षेत्ररूपात्मने नमः ।
नमोऽस्तु मूर्तिमूर्ताय त्रिमूर्तये नमो नमः ।।७७।।

नमस्ते बिन्दुतीर्थाय नमोऽमृतेश्वराय च ।
नमः पुष्करतीर्थाय चन्द्रभागाय ते नमः ।।७८।।

नमस्ते जानुदेवाय धीरावत्यै नमो नमः ।
नमस्ते पुंडरीकाय भीमरथ्यै नमो नमः ।।७९।।

मुक्तिकेशप्रवराय वेणुवादात्मने नमः ।
नमस्तेऽनंतपादाय द्विपदाय नमो नमः ।।८०।।

नमो गोवत्सपादाय गोपालाय नमो नमः ।
नमस्ते पद्मतीर्थाय नरनारायणात्मने ।।८१।।

नमस्ते पितृतीर्थाय लक्ष्मीतीर्थाय ते नमः ।
नमोऽस्तु शंखचक्राय गदापद्माय ते नमः ।।८२।।

नमोऽश्वत्थनृसंहाय कुंडलाख्यस्वरूपिणे ।
नमस्ते क्षेत्रपालाय महालिंगाय ते नमः ।।८३।।

नमस्ते रंगशालाय नमः कीर्तनरूपिणे ।
नमो रुक्मिणिनाथाय महामूर्त्यै नमो नमः ।।८४।।

नमो वैकुंठनाथाय नमः क्षीराब्धिशायिने ।
सर्वब्रह्म नमस्तुभ्यमहंब्रह्मात्मने नमः ।।८५।।

नमो नमो नमस्तुभ्यं नमस्तेऽस्तु नमो नमः ।

क्लीं श्रीं ओं ।
आद्यन्ते संपुटीकृत्य बीजैश्च प्रणवल्लभे ।।८६।।

अष्टोत्तरशतं मंत्रान् हृदयं नमनैः सह ।
अनन्यैः कीर्तितं यैश्च तेषामाज्ञां वहाम्यहम् ।।८९।।

यावन्यस्य यथा भावो यन्नामन्यासपूर्वकम् ।
तावदेव हि विज्ञानं गदितं मदनुग्रहात् ।।८८।।

श्रीशंकर उवाच ।
इत्युक्तं वासुदेवोक्तं गोप्याद्गोप्यतरं महत् ।
नितंय संकीर्तनं यस्य प्राप्तमुक्तिर्न संशयः ।।८९।

इदं गुह्यं हि हृदयं विठ्ठलस्य महाद्भुतम् ।
श्रृणुयाच्छ्रद्धया युक्तो वैकुंठे लभते रतिम् ।।९०।।

एवमुक्त्वा महादेवः पार्वतीमनुकंपया ।
समाधिस्थोऽभवच्छंभुः सुस्मितः कमलाननः ।।९१।।

## ஸ்ரீ பாண்டுரங்கன் புகழ் பாடல்கள்

ஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்கள் ஸங்கீத ஸாம்ராஜ்யத்தில் இறைவன் மீது அளவற்ற பக்திப்பாடல்களை இயற்றி மிக பெருமை வாய்ந்த புகழ் பெற்றவர். அன்றும் இன்றும் அவருடைய பாடல்களை சங்கீத கலைஞர்கள் பாடி ரஸிகர்களை இந்ப வெள்ளத்தில் ஆழ்த்தி வருகிறார்கள். ராஜமுக்தி என்ற திரைபடத்திற்கு சுமார் 50 வருடங்களுக்கு முன் ஸ்ரீபாண்டுரங்க விட்டல் பெருமான் மீது இயற்றிய பக்தி ரஸம் ததும்பும் பாடல்களில் சிலவற்றை இங்கு தரப்பட்டுள்ளது.

1. ராகம்: பூபாளம்

நீ பள்ளி எழுந்தாலல்லது உயிர்கள் உறக்கம் தெளியுமோ விட்டலா

(நீ பள்ளி)
ஹே பன்னக சயனா - கருணை பொழி
பங்கஜ தள நயனா - ப்ரபோ (நீ பள்ளி)

ஆதவன் மதிக்கொளி தருவதும் நீ -
நால்வேதப் பொருளும் நீ - மாதவனே -
பொன் னாதனே என் மனமோக - மகலவும்
ஜோதி வடிவம் கண்டேன் மனம் விழி குளிரவும் (நீ பள்ளி)

2. ராகம் - ஸாரமதி

உனையல்லால் ஒருதுரும் பசையுமோ
ஓ பாண்டுரங்கா - உலகினிலே (உனையல்லால்)
வினையென்ற பெயரால் மலைபோலும் துன்ப
வெய்யிலில் வாட்டுவது நின் விளையாட்டு (உனையல்லால்)

இரங்கி மனம் கனிந்து அன்னைபோல் பரிந்து
இன்பத் தலாலாட்டுவது உன்னருள் ரங்கா (உனையல்லால்)

மாயாவதாரப்ரபோ உன்னை
மறவாத பாக்கியமிருந்தால்
மாய இன்ப துன்பங்கள் என்னை-
என்ன செய்யும் வரதா - ஜெய மாதவனே (உனையல்லால்)

தீன பந்து விட்டலா - ஜெய ஜெய பாண்டுரங்க விட்டலா
தயாஸிந்து விட்டலா - ஜெய ஜெய பண்டரீச விட்டலா

*3. ராகம் - கமாஸ்*

*மானிட ஜென்மம் மீண்டும் வந்திடுமோ - உலகீர் - உயர் (மானிட)*

*ஞான வைராக்யம் - ஞான வைராக்யம்*
*தவம் ஜீவ காருண்யம் - உண்மையான*
*பக்தி பகுத்தறிவுடன் இகபர சுகம்தரும் கருணையாம் (மானிட)*

*கருவறையினுள் கிடந்து வெளியில்*
*வரும் துயர் நினைந்தாலும்*
*குடல் கலங்குதே - இங்கெதிரில்*
*மரணம் எனும் வெம்புலியும் சீறுதே*
*இருவினை வசமாம் இவ்வுடலொரு நீர்க்குமிழ்*
*இதனிடைஉயர் நெறியுடைய*
*இறைவன் அருளி வேட்கை*
*உடையராகி இடையறாத திருவடி நினைவுடனே*

*கடிமதில் பண்டரி புரமதை ஒருமுறை*
*கண்டு பணிந்து*
*ப்ரபோ பாண்டுரங்க ஜெய விட்டல*
*என்று பணிந்திட (மானிட)*

*4. ராகமாலிகை - விருத்தம்*
*பிலஹரி ராகம்-*
*1. பொங்கும் அன்பர் தரும் செங்கல் நின்றருளும் ரங்கா*
*தேவர் முனிவர் பணி பண்டரீச புகழ் பாண்டு ரங்க வரதா*
*பாண்டுரங்க*
*வரதா*

*2. பூர்வி கல்யாணி ராகம்*
*எங்கும் என்றும் நிறை மங்களாலயா*
*இரங்கி உன் அடிமலர் இன்ரநிழலை*
*விரும்பி ஏங்கும் என்னை*
*எனஅறு வந்தருள்வாயோ*

*3. மோஹனம் ராகம்*
*பங்கஜாக்ஷ உனை நான் புகழ்ந்து*
*துதி பாடவும் தரமில்லேன்*
*பாண்டவர் துணைவனே - தயாபரனே*
*பாண்டு ரங்க சரணம் - பாண்டு ரங்க சரணம்*

*4. ராகம் - மத்யமாவத்*

*சங்க சக்ரமிரு செங்கை வைத்த அகளங்கர*
*புன்னகை தவழ் சந்த்ர பிம்ப முக சுந்தராங்கா - ஜய*
*நந்த கோப குமரா - நந்த கோப குமரா நந்த கோப குமரா*

*5. ராகம் - ஸிந்துபைரவி*

*தீன பந்து வான முரளி கான வினோதா*
*தேவர் பணி அநாதநாத தாமரைபாதா*
*பாண்டு ரங்க சரணம் நீ எநதாண்டவனன்றோ*
*மீண்டும் மீண்டும் பிறவி கடலில் தள்ளுதல் நன்றோ*

## *முடிவுரை*

*பங்கஜ மலர் மதுவுண்ணும் வண்டு போல்*
*மாதவன் மலரடி மறவா மனத்தவர்க்கும்,*
*உலகெல்லாம் மகிழவே தனது பொருள்*
*உடலுயிறும் உதவும் உத்தமர்களுக்கும்,*
*உலகிலே பொருளிலும் மற்றில்லாதவராய்*
*உத்தம சத்குண வித்தகராய் விளங்குபவர்களுக்கும்,*
*இன்பத்தில் இறுமாந்திடாமல் வரும் துன்பத்தில் மனம் ஓயந்திடாமல்*
*இரவு பகல் ரங்கன் நினைவில் மனோலயமாய*
*அந்த ரங்க சமரச உணர்வோடிருப்பவர்க்கும்*
*இங்கும் அங்கும் எங்கும் இன்பமாய*
*பாண்டுரங்கன் அருள் நிலைத்திருக்கும்.*

*ஜெய விட்டல ஜெய ஹரி விட்டல*
*பாண்டுரங்க விட்டல பண்டரீ நாத விட்டல*

*ஸ்ரீ ருக்மிணி ஸமேத பாண்டுரங்கனை பணிவோம்.*